செ.வெ.எண் :- 40

நாள் :- 20.2.2016

# செய்தி குறிப்பு

நகராட்சிகள் மற்றும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் மத்திய அரசின் துறையான சமூக நீதி மற்றும் அதிகார அமைச்சகத்தின் சார்பாக, மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர், சுகாதாரமற்ற கழிப்பிடங்களில் மனித கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோரை கண்டறியும் கணக்கெடுப்புப்பணி ஏற்கனவே 2014ம் ஆண்டு மாநில அரசால் நடத்தப்பட்டுள்ளது.

தற்போது விடுப்பட்ட நபர்கள் எவராவது இருப்பின் அவர்களை மறு கணக்கெடுக்கும் பணி மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்களை கணக்கெடுக்கும் பணி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பேரூராட்சி பகுதிகளில் 22.02.2016 அன்று துவங்கி 24.02.2016 அன்று முடிவு பெறும்.

இக்கணக்கெடுப்பு சுகாதாரமற்ற கழிப்பிடங்கள், திறந்தவெளி கால்வாய்கள், கழிவுநீர் தொட்டிகள் (Septic tanks) மற்றும் இரயில்வே பாதைகளில் உள்ள மனித கழிவுகளை சுத்தம் செய்தல், அகற்றல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களை கண்டறிவதற்காகவும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும் நடத்தப்படுகிறுது.

இக்கணக்கெடுப்பில், மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தவறாது கலந்து கொண்டு முழுமையான மற்றும் சரியான தகவல்களை அளிக்குமாறு கோரப்படுகிறது. படிவங்களை பூர்த்தி செய்வதற்கு அலுவலர்கள் உதவி செய்வார்கள்.

இக்கணக்கெடுப்பு நடைபெறுவது தொடர்பான தகவல்களை, மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தெரியப்படுத்துமாறு பொது மக்கள், தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைவரையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

செய்தி வெளியீடு :- இராமநாதபுரம்
செ.ம.தொ.அ.